**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

CC .No.140/2016
Prosecution witness.2

| | |
|---|---|
| பெயர் : கரந்தமலை | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of February 2025.

07.02.2025

(1 மற்றும் 3 எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு கூடத்தில் வேலை பார்த்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். எதிரிகள் வகையறாக்கள் என் மீது தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு எனக்கு ஆதரவாக முதுகுளத்தூர் உரிமையியல் நீதிமன்றத்திலும் மாண்புமிகு பரமக்குடி சார்பு நீதிமன்றத்திலும் தீர்ப்பாகி விட்டது. அதனால் 22.02.2015 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் எனது மனைவி அ.சா.1 குருந்தாயியும் விறகு வெட்டிக்கொண்டிருந்தோம்.

2) அப்போது அங்கு வந்த 1ம் எதிரி அர்ஜீணன், இறந்து போன 2ம் எதிரி முத்துவேலம்மாள், 3ம் எதிரி சந்திரஜீத் ஆகியோர் கையில் கம்பு மற்றும் கத்தியுடன் வந்து எப்படிடா இடத்தில் உள்ள விறகை வெட்டலாம் தேவிடியா பயலே என்று கூறினார்கள். நான் அதற்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பி ஆகி விட்டது என்று கூறினேன். அப்போது 1ம் எதிரி அர்ஜூணன் என்னை தள்ளிவிட்டு அருவாளின்

கைப்பிடியால் என்னை வலது கையில் அடித்தார்.

3) உடனடியாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். பின்பு காவல் நிலையம் சென்று நான் புகாரை எழுதி எனது மனைவி அ.சா.1 கையெழுத்து செய்து கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் B.Com வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் புகார் கொடுத்தது யார் என்றால் எனது மனைவிதான் புகார் கொடுத்தார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றால் தனிப்பட்ட பிரச்சனை எதுவும் கிடையாது இடப்பிரச்சனை இருந்தது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் நான் வீட்டிலேயே வைத்தியம் பார்த்து விட்டேன் மருத்துவனைக்கு செல்லவில்லை. எனக்கு எந்தவிதமான காயமும் ஏற்பட்டவில்லை என்பதால்தான் மருத்துமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

2) உண்மையில் எனக்கு காயம் ஏற்பட்டிருந்தால் நான் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும் புகாரும் நான் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு தான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

CC .No.140/2016
Prosecution witness.1

| | |
|---|---|
| பெயர் : குருந்தாயி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of February 2025.

07.02.2025

(1 மற்றும் 3 எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 2015 ம் வருடம் தேதி, மாதம் தற்போது நினைவில் இல்லை. காலை 10.00 மணியளவில் 1 ம் எதிரி அர்ஜீணன், 3 ம் எதிரி சந்திரஜீத் ஆகியோர் வந்தார்கள். 1 ம் எதிரி அர்ஜீணன் எனது கணவர் கரந்தமலையை கத்தி கம்பை வைத்து வலது கை மற்றும் இடுப்பில் வெட்டினார். எனது கணவருக்கு வீட்டிலேயே கை மருந்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் காவல் நிலையம் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி

வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** சம்பவம் நடந்தவுடன் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் இல்லை. 22.02.2015 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் என்னையும் எனது கணவரையும் தாக்கிய பிறகு இளஞ்செம்பூர் காவல் நிலையத்திற்கு 23.02.2015 ம் தேதி சென்று எதிரிகள் மீது புகார் மனு எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதற்கான சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எதிரிகள்தான் எங்கள் மீது வழக்கு போட்டுள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் குடும்பமும் எதிரிகள் குடும்பமும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தற்போது உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எதிரிகள் எங்கள் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் எங்களை விசாரிக்க வந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் மீது இருந்த முன் விரோதம் காரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.